بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡم نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡکَرِيۡم وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡد

# பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 19 ஜுலை 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்றும் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறப்படும். முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஆமிர் பின் சலமா (ரலி) ஆகும். அன்னார் பலீ கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். இதன் காரணமாக அன்னார் ஆமிர் பின் சலமா பல்வி என்றும் அழைக்கப்படுகின்றார்கள். ஹஸ்ரத் ஆமிர் அன்ஸார்களின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்னாருக்கு பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது.

அடுத்த சஹாபி அப்துல்லாஹ் பின் சுராக்கா ஆவார்கள். அன்னார் குரைஷிகளின் பனூ அதீ கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். இது உமர் பின் கத்தாபின் கோத்திரமாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுராக்கா அவர்களின் ஐந்தாம் தலைமுறையில் ரீஹா என்ற பெயருடைய நபர் மூலமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பரம்பரையுடன் இணைகிறார்கள். அதே போன்று பத்தாம் தலைமுறையில் கஅப் என்ற பெயருடைய நபர் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரம்பரையுடன் இணைகிறார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுராக்கா அவர்கள் தமது சகோதரர் ஹஸ்ரத் அம்ர் அவர்களுடன் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். ரிஃபா பின் அப்துல் முன்ஸிரின் வீட்டில் தங்கினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுராக்கா அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 35 வது ஆண்டில் வஃபாத்தானார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுராக்கா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: تَسَحَّرُوْا وَلَوْ بِالْمَاءِ அதாவது தண்ணீரைக் கொண்டு சஹரி செய்ய நேரிட்டாலும் சஹரி செய்யுங்கள். அதாவது சஹரி செய்வதை கட்டாயமாக்கி விட்டார்கள்.

அடுத்த சஹாபியின் பெயர் மாலிக் பின் அபூ ஹவ்லி ஆகும். அன்னார் குரைஷிகளின் பனூ இஜ்ல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். ஹஸ்ரத் ஹவ்லி அவர்கள் தமது இரண்டு சகோதரர்களான ஹஸ்ரத் ஹிலால் மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ்வுடன் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் மாலிக் பின் அபூ ஹவ்லி அவர்களின் மரணம் நிகழ்ந்தது.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் வாகிது பின் அப்துல்லாஹ் ஆகும். அன்னார் பனூ தமீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் தப்லீக்கின் காரணமாக இஸ்லாத்தை ஏற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு வருகை தருவதற்கு முன்பாகவே ஹஸ்ரத் வாகிது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தாரே அர்கம் தொடர்பாக சுருக்கமாக நான் எடுத்துக் கூறுகின்றேன். மக்காவில் தப்லீக் மையம் ஏற்பட வேண்டும்; முஸ்லிம்கள் தொழுகைக்காக வர வேண்டும்; ஒன்றுகூட வேண்டும்; மேலும் எவ்வித தடையுமின்றி தமது தர்பிய்யத் விவகாரம் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வழிகாட்டல் பெற வேண்டும். இவ்வாறு இஸ்லாத்தைப் பற்றிய பிரச்சாரமும் செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக ஒரு தலைமையகம் வேண்டும் என்ற எண்ணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தோன்றியது. எனவே இதற்காக தலைமையக அந்தஸ்தைக் கொண்ட ஒரு வீட்டின் தேவை ஏற்பட்டது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஃபா மலையடிவாரத்தில் இருந்த புதிய முஸ்லிமான அர்கம் பின் அபீ அர்கமின் வீட்டைத் தேர்ந்தெடுத்தார்கள். முஸ்லிம்கள் இங்குதான் ஒன்று கூடி வந்தனர். இங்குதான் தொழுது வந்தனர்.

மேலும் உண்மையை தேடக்கூடியவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தபோது அன்னாரும் இந்த இடத்தில்தான் இஸ்லாத்தைப் பற்றி தப்லீக்கும் செய்தார்கள். இதன் காரணமாக இந்த இடம் வரலாற்றில் ஒரு சிறப்பான அந்தஸ்தைப் பெற்று விட்டது. மேலும் தாருல் இஸ்லாம் என்ற பெயராலும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் தாரே அர்கமில் பணி செய்தார்கள். தாரரே அர்கமில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் இறுதியானவர் ஹஸ்ரத் உமர் அவர்கள் என்றும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் முஸ்லிம்களுக்கு அதிக ஆற்றல் கிடைத்தது. இவ்வாறு இவர்கள் தாரே அர்கமிலிருந்து வெளியேறி வெளிப்படையாக தப்லீக் செய்ய ஆரம்பித்து விட்டனர் என்று வரலாற்றாசிரியர்கள் எழுதுகின்றனர்.

ஹஸ்ரத் வாகிது அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். மதீனாவில் ரிஃபா பின் அப்துல் முன்ஸிரின் வீட்டில் தங்கினார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் வாகிது அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் நஸர் பின் ஹாரிஸ் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் கோத்திரமான அவ்ஸ் குடும்பத்தின் பனூ அப்து பின் ரஸ்ஸாக்கைச் சேர்ந்தவர். ஹாரிஸ் பின் அப்து அன்னாரது தந்தையின் பெயராகும். சவ்தா பின்த் சவ்வாது அன்னாரது தாயாரின் பெயராகும். ஹஸ்ரத் நஸர் பின் ஹாரிஸ் அவர்களின் தந்தையான ஹஸ்ரத் ஹாரிஸ் அவர்களும் பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபி என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நஸர் அவர்கள் காதிஸிய்யா போரில் ஷஹீதானார்கள். ஹிஜ்ரி 14 வது ஆண்டு ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் முஸ்லிம்களுக்கும் ஈரானியர்களுக்கும் இடையே காதிஸிய்யா என்ற இடத்தில் போர் நடைபெற்றது. இதன் விளைவாக ஈரானிய ஆட்சி முஸ்லிம்களின் கையில் வந்தது.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் மாலிக் பின் அம்ர் ஆவார்கள். அன்னார் பனூ சுலைம் கோத்திரத்தின் பனூ ஹஜ்ர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அன்னாரது தந்தையின் பெயர் அம்ர் பின் சுமைது ஆகும். ஹஸ்ரத் மாலிக் தமது இரண்டு சகோதரர்களான ஹஸ்ரத் சக்ஃப் பின் அம்ர் மற்றும் ஹஸ்ரத் முத்லிஜ் பின் அம்ர் ஆகியோருடன் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு யமாமா போரில் அன்னார் ஷஹீதானார்கள்.

அடுத்த சஹாபி நுஃமான் பின் அஸர் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் பலீ கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். அன்னார் பைஅத்தே உக்பா, பத்ர் போர் மற்றும் ஏனைய அனைத்துப் போர்களில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். யமாமா போரில் அன்னார் ஷஹீதானார்கள்.

அடுத்த சஹாபி உவைம் பின் சாயிதா ஆவார்கள். அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் கிளையான பனூ அம்ர் பின் அவ்ஃபைச் சேர்ந்தவர்கள். அன்னார் முதலாவது மற்றும் இரண்டாவது பைஅத்தே அக்பாவில் கலந்து கொண்டார்கள்.

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில், முதலாவது பைஅத்தே அக்பாவிற்கு முன்பாக மதீனாவின் அன்ஸார்களின் ஒரு குழு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டது. இவர்களில் உவைம் பின் சாயிதாவும் ஒருவர் ஆவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அதாவது, உவைம் பின் சாயிதா அல்லாஹ்வின் அடியார்களில் எத்தகைய சிறந்த அடியாராவார்! அவர் சுவர்க்கவாசிகளைச் சார்ந்தவர் ஆவார்.

ஒரு அறிவிப்பிற்கேற்ப, فِيهِ رِجَالٌ يُحِبُّونَ أَن يَتَطَهَّرُوا ۚ وَاللَّهُ يُحِبُّ الْمُطَّهِّرِينَ என்ற வசனம் இறங்கியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உவைம் பின் சாயிதா எத்தகைய நல்லடியாராக இருக்கின்றார்! அவரும் இவர்களைச் சேர்ந்தவர் ஆவார்.

ஹஸ்ரத் உவைம் பின் சாயிதா பத்ர், உஹது, அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஆஸிம் பின் சுவைது கூறுகின்றார்கள்: அவர்கள் உவைம் பின் சாயிதாவின் மகளான உபைதா அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டார்கள். அதாவது, ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்கள் ஹஸ்ரத் உவைம் பின் சாயிதாவின் கபருக்கு அருகில் நின்றபோது இவ்வாறு கூறினார்கள். அதாவது, உலகத்தில் எவரும் இந்த நபரை விட சிறந்தவர் என்று கூற முடியாது. பெருமானார் (ஸல்) அவர்களுக்காக எந்த கொடியெல்லாம் நடப்பட்டதோ உவைம் அவர்கள் அதன் நிழலின் கீழ் இருந்தார்கள்.

உஹது போரில் ஹாரிஸ் பின் சுவைது அவக்ள் ஹஸ்ரத் முஜஸ்ஸிர் பின் ஸியாதை கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள் அறியாமைக் காலத்தில் ஹாரிஸ் அவர்களின் தந்தையை கொலை செய்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா வந்த பிறகு ஹாரிஸ் மற்றும் முஜஸ்ஸிர் ஆகிய இருவரும் முஸ்லிமாகி விட்டனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்களை கொலை செய்ய வேண்டும் என்று ஹாரிஸ் அவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தார்கள். உஹது போரில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உவைம் பின் சாயிதா அவர்களிடம் ஹாரிஸ் அவர்களை கொலை செய்யுமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் உவைம் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்நாளிலேயே மரணமடைந்து விட்டார்கள்.

அடுத்த சஹாபி நுஃமான் பின் ஸினான் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ நுஃமான் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அன்னாருக்கு பத்ர், உஹது போர்களில் கலந்து கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது.

அடுத்த சஹாபி அன்த்தரா மவ்லா சுலைம் ஆவார்கள். அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தும் நற்பாக்கியம் கிடைத்தது. இன்னொரு அறிவிப்பிற்கேற்ப அன்னார் ஹஸ்ரத் அலி அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 37 ஆம் ஆண்டு ஸஃப்ஃபீன் போரில் ஷஹீதானார்கள் என்று வந்துள்ளது.

அடுத்த சஹாபி நுஃமான் பின் அப்தே அம்ர் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ தீனார் பின் நஜ்ஜாரைச் சேர்ந்தவர்கள். அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நுஃமான் பின் அப்தே அம்ர் அவர்களுக்கு உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தும் நற்பாக்கியம் கிடைத்தது. ஹஸ்ரத் நுஃமான் மற்றும் ஹஸ்ரத் ஸஹ்ஹாக் ஆகியோருக்கு குத்பா என்ற மூன்றாவது ஒரு சகோதரரும் இருந்தார்கள். இவர்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபி என்ற அந்தஸ்தைப் பெறும் நற்பேறு கிடைத்திருந்தது. குத்பா அவர்கள் பிஃரே மவூனா சம்பவத்தின்போது ஷஹீதானார்கள்.

முஹம்மது பின் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ தீனாரைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கடந்து சென்றார்கள். அந்த பெண்ணின் கணவர், சகோதரர், தந்தை ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களுடன் உஹது போரில் கலந்து கொண்டு ஷஹீதானர்கள்.

அந்த பெண்ணிடம் அதற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டபோது, அந்த பெண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வாறிருக்கின்றார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், அன்னார் நலமாக இருக்கின்றார்கள்; மேலும் எவ்வாறு நீ விரும்புகின்றாயோ அவ்வாறே இருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அதற்கு அந்த பெண்மணி நான் பார்க்க விரும்புகின்றேன்; எனக்கு அன்னாரை காண்பியுங்கள் என்று கூறினாள். பிறகு அந்த பெண்மணிக்கு அன்னாரை காண்பித்தார்கள். அந்த பெண்மணி பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்த பிறகு, அன்னாருக்குப் பிறகு ஏனைய அனைத்து துன்பங்களும் சாதாரண ஒன்றாகும் என்று கூறினாள்.

இன்னொரு அறிவிப்பில் அந்தப் பெண்ணின் மகன் ஷஹீதானது தொடர்பான அறிவிப்பும் வருகின்றது. அந்தப் பெண்ணின் பெயர் சமீரா பின் கைஸ் ஆகும். ஹஸ்ரத் நுஃமான் பின் அப்தே அம்ர் அவர்கள் இப்பெண்ணுடைய மகன் ஆவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு முறை இந்த சம்பவத்தைப் பற்றி கூறியுள்ளார்கள். இந்த உதாரணத்தை இங்கு பல முறை நான் எடுத்துக் கூறியுள்ளேன். இது ஒவ்வொரு சபைகளிலும் எடுத்துக் கூறப்படுவதற்கு தகுதிவாய்ந்ததாகும். மேலும் இதன் நினைவை உயிருடன் வைத்திருக்க வேண்டும்.

மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்தப் பெண்மணியின் சம்பவத்தைப் படிக்கும்போது எனது உள்ளம் அவர்களின் மீதான கண்ணியத்தினால் நிறைந்து விடுகிறது. அந்த பெண் எனது அன்பிற்குரியவருக்காக எவரும் வெளிப்படுத்த இயலாத தனது அன்பின் ஒரு உதாரணத்தை விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னார் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களின் உள்ளங்களில் எத்தகைய அன்பை ஏற்படுத்தியிருந்தார்கள் என்றால் அவர்களுக்கு அன்னாருக்கு எதிரில் வேறு எதைப் பற்றியும் கவலை இருக்கவில்லை. அன்னார் அல்லாஹ்விற்கு விருப்பமானவர்கள் என்பதால் தான் இந்த அன்பும் அவர்களுக்கு இருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையில் அந்த மக்கள் இறைவன் மீது அன்பு கொண்டிருந்தவர்கள் ஆவர். ஏனென்றால் அல்லாஹ் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நேசம் வைத்திருந்தான். எனவே அன்னாரது சஹாபாக்கள் அன்னாரை நேசித்தார்கள்.

மேலும் கூறினார்கள்: முஹம்மது (ஸல்) அவர்கள் தொடர்பாக இந்த அன்பை தான் அல்லாஹ் இந்த மக்களின் உள்ளத்தில் ஏற்படுத்தினான். இருந்தபோதிலும் அவர்கள் அனைத்தையும் விட இறைவனுக்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். இதுவே ஏகத்துவமும் ஆகும். இதுவே அவர்களை முழு உலகிலும் மேலோங்கச் செய்தது. இறைவனுக்கு எதிரில் அவர்கள் தாயையும் பொருட்படுத்தியதில்லை; தந்தையையும் பொருட்படுத்தியதில்லை; அவ்வாறே சகோதரனையும், சகோதரியையும் பொருட்படுத்தியதில்லை. மேலும் கணவனையோ, மனைவியையோ பொருட்படுத்தியதில்லை. அவர்களுக்கு முன்னால் ஒரு ஒரு விஷயம் மட்டும்தான் இருந்தது. அது என்னவென்றால், அவர்களது இறைவன் அவர்கள் மீது திருப்தி கொள்ள வேண்டும் என்பதேயாகும். எனவேதான் அல்லாஹ் அவர்களைக் குறித்து ரலியல்லாஹு அன்ஹும் (அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி கொண்டுள்ளான்) என்று கூறினான்.

அன்னார் கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு முஸ்லிம்களின் நிலை இவ்வாறு இருக்கவில்லை. இப்போது இவர்களுக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கின்றதென்றால் அது வெறும் சிந்தனையில் மட்டுமே இருக்கிறது. நாங்கள் அல்லாஹ்வை ஏற்றுக் கொள்கின்றோம்; ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றோம் என்று அவர்கள் கூறத்தான் செய்கின்றனர். ஆனால் அவர்களது உள்ளத்தில் இவ்விஷயம் இல்லை. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்பாக இவர்களுக்கு முன்னால் கூறப்பட்டால் இவர்களது உள்ளங்கள் துடிக்கின்றது. மேலும் அன்னாரது அன்பிற்குரியவர்கள் தொடர்பாக கூறப்பட்டாலும் இவர்களது உள்ளங்கள் துடிக்கின்றது. ஷியா, சன்னி போன்றோர் அன்னார் மற்றும் அன்னாரது குடும்பத்தைப் பற்றி பேசும் போது அவர்களிடம் உணர்ச்சி மேலோங்கி விடுகின்றது. ஆனால் அல்லாஹ்வைப் பற்றி எடுத்துக் கூறும்போது அவர்களது உள்ளங்கள் துடிப்பதில்லை. ஆனால் பெருமானார் (ஸல்) போன்ற அருளை நமக்கு வழங்கியவன் அல்லாஹ்வே ஆவான்.

ஆக அல்லாஹ்வின் மீதான அன்பு மற்றும் அவனது பெயரைக் கேட்டாலே நமது உள்ளத்தில் ஒரு துடிப்பு ஏற்பட வேண்டும். ஏனென்றால் உண்மையான முன்னேற்றம் அல்லாஹ்வின் மீதான அன்பினாலேயே ஏற்படும். ஏகத்துவத்தில் நிலைபெற்றிருப்பதிலேயே ஏற்படும். ஆக இதுதான் அடிப்படையான விஷயமாகும். இதனை நம்மில் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் நம்மிடத்தில் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீதான உண்மையான அன்பையும், அது பற்றிய சரியான புரிதலை ஏற்படுத்திக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். தொழுகைக்குப் பிறகு அவர்களது ஜனாஸாவையும் தொழ வைப்பேன்.

முதலாவது குறிப்பு மதிப்பிற்குரிய நவாப் மஃவூது அஹ்மது கான் சாஹிப் அவர்களின் மகனான, கராச்சி ஜமாஅத்தின் அமீர் மதிப்பிற்குரிய மவ்தூத் அஹ்மது கான் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஜூலை 14 அன்று 78 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். انا للہ وانا الیہ راجعون

12 ஏப்ரல் 1941 ஆம் ஆண்டு அன்னார் காதியானில் மதிப்பிற்குரிய மஸ்வூது அஹ்மது கான் மற்றும் தய்யுபா சித்தீக்கா ஆகியோரின் வீட்டில் பிறந்தார்கள். ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி சாஹிப் அவர்களின் மகன் வழிப்பேரனும், டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்களின் மகள் வழிப் பேரன் ஆவார்கள். அன்னார் மனைவி மட்டுமின்றி ஒரு மகனையும் ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

இவர்களது மகன் வக்கீல் துறையுடன் தொடர்பு கொண்டிருக்கிறார். சாஹிப்ஸாதா முபராக் அஹ்மது சாஹிப் அவர்களின் பேத்தியின் மகன்தான் அன்னாரது மருமகனாவார். அன்னாரது மகள் கணவருடன் கனடாவில் இருக்கின்றார். அன்னார் மிகவும் எளிமையான இயல்பைக் கொண்டவர். அனுதபாத்துடன் நடந்து கொள்ளக்கூடியவர்.

இவர்களது மகன் கூறுகின்றார்: எனது தந்தை எனக்கும் எனது சகோதரி மற்றும் இதர குழந்தைகளிடம், வாரத்தில் ஒரு முறை காலத்தின் கலீஃபாவிற்கு கண்டிப்பாக கடிதம் எழுத வேண்டும். மேலும் இந்த தொடர்பை அதிகரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வந்தார்கள்.

அன்னாரது மனைவி கூறுகின்றார்கள்: சந்தாவை முழுப் பேணுதலுடன் செலுத்தி வந்தார்கள்.

அவர்களது மகள் கூறுகின்றார்: எனது தந்தை அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை, கிலஃபாபத்துடன் பற்றுணர்வுடன் நடந்து கொள்ளுதல் மற்றும் காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுதல் ஆகியவற்றிற்கான மிகப்பெரிய முன்மாதிரியை காட்டியுள்ளார்கள். மேலும் இதில் நிலைத்திருப்பதற்கு எங்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நான் நாஸிர் அஃலாவாக நியமிக்கப்பட்ட போதும் அன்னார் மிகவும் பணிவுடன் நடந்து கொண்டவாறு என்னுடன் எல்லா வகையிலும் கண்ணியத்துடனும் நன்றியுணர்வுடனும் நடந்து கொண்டார்கள்.

அல்லாஹ் இவர்களுக்கு பாவமன்னிப்பை வழங்குவானாக. கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரது தகுதியை உயர்த்துவானாக. இவர்களது குழந்தைகளுக்கும் இவர்களது நன்மையை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா கனடாவின் நாயிப் அமீர் கலீஃபா அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்களுடையதாகும். 9 ஜூலை அன்று இதயத் துடிப்பு நின்று விட்டதனால் தமது 84 வது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். انا للہ وانا الیہ راجعون

அனைவரிடமும் இனிமையாக பழகக்கூடியவர்; அனைவருக்கும் விருப்பத்திற்குரியவர்; புன்சிரித்த முகத்துடன் எப்போதும் தென்படுபவர்; விவகாரங்களை சரியாக புரிந்து கொள்ளக் கூடியவர்; நல்ல ஆலோசனைகளைக் கூறக் கூடியவர்; நல்லவர்; நேர்மையானவர். உடல்நலம் சரியில்லாமல் இருந்த போதிலும் தமது கடமையை கடைசி மூச்சு வரை தைரியத்துடன் நிறைவேற்றி வந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழிய தொடர்பு இருந்தது. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள்.

அல்லாஹ் இவர்களுடனும் மக்ஃபிரத் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு பொறுமையை வழங்குவானாக. இவர்கள் விட்டுச் சென்ற நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் A.கலீல் அஹ்மது**